රාජ්‍ය මුදල් දෙපාර්තමේන්තුව
அரச நிதித் திணைக்களம்
DEPARTMENT OF PUBLIC FINANCE

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General — Tel. 94-11-2484614, Fax. 94-11-2431458, Email: dgpf@pfd.treasury.gov.lk
කාර්යාලය / அலுவலகம் / Office — Tel. 94-11-2484637, Fax. 94-11-2431458

பொதுத் திறைசேரி
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
செயலகம், கொழும்பு 01, இலங்கை.

මහා භාණ්ඩාගාරය
මුදල්, ආර්ථික සහ ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශය
මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.

General Treasury
Ministry of Finance, Economic and Policy Development
The Secretariat, Colombo-01, Sri Lanka.

Website: www.treasury.gov.lk
Gen. E-mail: info@pfd.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: PFD/REG/WOL/ABS/General
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2020.06.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்

<u>வருடாந்த பொருட்கள் சுற்றாய்வு</u>

"வருடாந்த பொருட்கள் சுற்றாய்வு" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள 2016.03.31 ஆந் திகதிய PFD/RED/03/03/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இல. 05/2016 இன்பால் உங்களது அவதானத்தினைக் கோருகின்றேன்.

02. அரச நிதிச் சுற்றறிக்கை இல. 05/2016 இன் 03 ஆம் பந்தியின் 3.1.7 மற்றும் 3.2.7 ஆம் ஏற்பாடுகளுக்கமைவாக வருடாந்த பொருட்கள் சுற்றாய்வினை மேற்கொண்டு குறித்த பொருட்கள் சுற்றாய்வு தொடர்பான அறிக்கையினை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்து அது பற்றி அனைத்து நிதிவருடத்திலும் மார்ச் 31 ஆம் திகதி மற்றும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

03. தற்பொழுது அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ மாவட்டச் செயலகங்களில் பெரும்பாலானவை பொருட்கள் சுற்றாய்வு அறிக்கைகளின் பிரதிகளை (தி. & க. 66 மற்றும் பொது 47 படிவத்துடன்) அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக அறியக் கிடைத்துள்ளது.

04. நி.ஒ.வி. 507 மற்றும் நி.ஒ.வி.756 இன் கீழ் நியமிக்கப்படும் சுற்றாய்வுக் குழுக்களின் அறிக்கைகள் அனைத்தையும் இத்திணைக்களத்திற்கு அனுப்பவது அவசியமற்றது என தெரிவித்துக்கொள்கின்றேன். இதன்படி, சுற்றாய்வுக் குழு நடவடிக்கைகள் நிறைவுற்றதுடன் இறுதி அறிக்கைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்மைய கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அவற்றின் அனவல் கடிதத்தின் பிரதியை மாத்திரம் இத்திணைக்களத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

05.மேலும், நீங்கள் கணக்கீட்டு அலுவலரொருவராக செயற்படுகின்ற நிறுவனத்தின் கீழ் வருடாந்த பொருட்கள் சுற்றாய்வுக் குழுக்கள் பல நியமிக்கட்டுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த குழுக்களினது அறிக்கைகள் அனைத்தும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு அனுப்பப்பட்டமை தொடர்பான பொழிப்பினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 01 இற்கு அமைவாக தயாரித்து முன்னைய வருடத்திற்காக இடம்பெற்ற சுற்றாய்வுக் குழுச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டமை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பொழிப்பறிக்கையினை நடைமுறை வருடத்தின் ஜூலை 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேலும் கேட்டுக்கொள்கின்றேன்.

**ஒப்பம்/ஜே.சீ.வெலிகமகே**
**அரச நிதிப் பணிப்பாளர் நாயகம்**

பிரதி : கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம்

படிவம் 01

பணிப்பாளர் நாயகம்
அரச நிதித் திணைக்களம்

**கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருட்கள் சுற்றாய்வுக் குழு அறிக்கைகளின் பொழிப்பறிக்கை**

அரச நிதிச் சுற்றறிக்கை இல. 05/2016 இன் 03 ஆம் பந்தியின் 3.1.7 மற்றும் 3.2.7 ஆம் ஏற்பாடுகளுக்கமைய இந்த அமைச்சு/ திணைக்களம்/ மாவட்டச் செயலகத்தின் ........... வருடத்துக்கான கீழே குறிப்பிடப்பட்ட பொருட்கள் சுற்றாய்வு அலகுகளின் சுற்றாய்வு நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துகின்றேன்.

| செலவினத் தலைப்பு மற்றும் பெயர் (1) | சுற்றாய்வு அலகுகளின் பெயர் (2) | சுற்றாய்வு அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதி (3) | 2020.06.16 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 05/2016 இன் பந்தி (04) இன் படி கண. நாயகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்ததாக அ.நி. திணைக்களத்திற்கு அறிவித்த திகதி (4) | ஏனைய காரணங்கள் (5) |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

.....................................................................................
அமைச்சின் செயலாளர்/ திணைக்களத் தலைவர்/ மாவட்டச் செயலாளர்

திகதி: